# மாகாண சபை அறிவித்தல்கள்

எனது இல.: மமாச/ஏ/12/90 (V).

## மத்திய மாகாண சபை

பின்வரும் நியதிச்சட்டம் 1992 மாச்சு மாதம் 26 ஆந் திகதி நடைபெற்ற மத்திய மாகாண சபை கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டதோடு அதற்கு இல. ஜிசிபி/ஏ எஸ்/ஓ உம் 1992 யூன் மாதம் 25 ஆந் திகதியும் கொண்ட கடிதத்தின்படி கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பீ. ஆர். ரணசிங்க,
சபைச் செயலாளர்,
மத்திய மாகாண சபை.

சபைச் செயலகம்,
மத்திய மாகாண சபை,
த. பெ. எண் 92,
பள்ளேகலை,
குண்டசாலை,
1992, யூலை மாதம் 17 ஆந் திகதி.

## 1990 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சபைகளின் நிருவாகத்தை மேற்பார்வை செய்வதற்கான தத்துவங்களின் நியதிச்சட்டம்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 13 ஆம் இலக்க யாப்பு திருத்தத்தின் 9 வது நிரலின் 04 - (1), (2), (3), (4) ன் கீழ் மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் அதிகாரப் பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் நிருவாகத்தை மேற்பார்வை செய்வதற்காகவும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் மத்திய மாகாண ஆளுநருக்களிக்கப்பட்ட தத்துவங்களை நடைமுறைப்படுத்துவதற்குமான ஏற்பாடுகளை ஆக்குவதற்கான நியதிச்சட்டமாகும்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு நிறைவேற்றப்படுவதாகுக :-

**சுருக்கப் பெயரும் அமுலாகும் திகதியும்.**

1. இந்நியதிச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க மத்திய மாகாண சபையின் (உள்ளூராட்சிச் சபைகளின் நிருவாகத்தினை மேற்பார்வை செய்வதற்கான பன்முகப்படுத்தப்பட்ட தத்துவங்கள்) நியதிச்சட்டமென எடுத்துக்காட்டப்படுவதுடன் ஆளுநரினால் நியமிக்கக்கூடியதான அவ்வாறான திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**செயற்திறமை இல்லாமையின் காரணமாக உள்ளூர் அதிகார சபைகளைக் கலைப்பதற்கு அமைச்சர் கொண்டுள்ள தத்துவங்கள்.**

2. (1) ஏதேனுமொரு உள்ளூராட்சிச் சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி சம்பந்தமாக அல்லது உறுப்பினர்களுள் எவரேனுமொருவர் சம்பந்தமாக—

(அ) தகுதியின்மை, பிறழ்முகாமைத்துவம் ; அல்லது

(ஆ) குறித்த சட்டத்தினால் அல்லது வேறு சட்டமொன்றினால் சுமத்தப்பட்ட கடமைகளைப் புரிவதற்கு தவறியமை ; அல்லது

(இ) குறித்த சட்டத்தினால் அல்லது வேறு சட்டமொன்றினால் சுமத்தப்பட்ட கடமைகளைப் புரிவதற்கு விடாப்பிடியான மறுப்பு அல்லது வேண்டுமென்ற அலட்சியம் ; அல்லது

(ஈ) குறித்த சட்டத்தினால் அல்லது வேறு சட்டமொன்றினால் அளிக்கப்பட்ட தத்துவங்களை துர்ப்பிரயோகம் செய்தல் ; அல்லது

(உ) உள்ளூராட்சிச் சபையின் கூட்டத்தினை நடாத்தவிடாது தடுத்தல் அல்லது அவ்வாறான கூட்டத்திற்கு சமுகந்தர மறுத்தல் அல்லது கூட்டத்தில் வாக்களிக்க மறுத்தல் அல்லது சபையின் கடமைகளை மேற்கொள்ளவிடாது தடுத்தல்

என்பது தொடர்பாக சபையொன்றின் அங்கத்தவர் பெயரிலோ, அல்லது தவிசாளர் பெயரிலோ எச் சந்தர்ப்பத்திலாதல் போதிய எண்பிப்பு இருக்கின்றது என மாகாண அமைச்சர் குழுவில் உள்ளூராட்சிவிடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் எனப்படுபவர் திருப்திப்படுமிடத்து ஒவ்வொரு விடயத்தினதும் சூழ்நிலைகள் தேவைப்படுத்தக்கூடியவாறு **வர்த்தமானியில்** (கசெற்றில்) வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரானவர் —

(i) தவிசாளரை பதவியிலிருந்து அகற்றலாம் ;

(ii) எல்லா உறுப்பினர்களையும் அல்லது அவற்றுள் எவரையும் பதவியிலிருந்து அகற்றலாம் ;

(iii) உள்ளூராட்சிச் சபையைக் கலைக்கலாம். அத்துடன் அத்தகைய கட்டளையானது வசதியாகக்கூடிய விரைவில் மாகாண சபைக்கு முன்னர் இடப்படலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளை ஒன்றை ஆக்குமுன்னர் (1) ஆம் உட்பிரிவில் குறியீடு செய்யப்பட்டுள்ள எவையேனும் கருமங்கள் பற்றித் தம்மைத் திருப்திப்படுத்தும் நோக்கத்துக்கென, அத்தகைய கருமம் பற்றி விசாரணை நடாத்தி மூன்றுமாத காலப்பகுதி ஒன்றுக்குள், அதன்மீது அறிக்கையிடும்படி ஓய்வு பெற்ற நீதி நிருவாக அலுவலர் ஒருவரை நியமித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அலுவலரானவர், அத்தகைய விசாரணை தொடர்பாக விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவொன்றின் தத்துவங்களை உடையவராய் இருத்தலும் வேண்டும்.

(3) (அ) அமைச்சரானவர் ஏதேனும் கருமத்தைப் பற்றி விசாரணை செய்யுமாறு (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஓய்வுபெற்ற நீதி நிருவாக அலுவலர் ஒருவரை நியமிக்கும்போது அமைச்சர் விடயம் ஒவ்வொன்றினதும் சூழ்நிலைகள் தேவைப்படுத்தக்கூடியவாறு **வர்த்தமானியில்** வெளியிடப்படும் கட்டளை மூலம் பின்வருவனவற்றைச் செய்யலாம் :-

(i) சூழ்நிலைக்கேற்றவாறு உள்ளூராட்சிச் சபையின் தவிசாளரை அல்லது முதல்வரை பதவியினின்றும் இடைநிறுத்தலாம். அத்தோடு துணைத் தவிசாளரை அல்லது துணைமுதல்வரை அவ்வாறான துணைத்தவிசாளர் அல்லது துணைமுதல்வரின் பதவி வறிதாயிருக்குமிடத்து அல்லது அவ்வாறானவர்களின் பதவி இடைநிறுத்தப்பட்டிருக்குமிடத்து தவிசாளரினது அல்லது முதல் வரினது தத்துவங்களைப் பிரயோகிக்குமாறு மாநகர சபை ஆணையாளரை, உதவி ஆணையாளரை அல்லது உள்ளூராட்சி ஆணையாளர் ஒருவரை பணிக்கலாம் ; அல்லது

(ii) உறுப்பினருள் எவரையும் பதவியிலிருந்து இடைநிறுத்தலாம் ; அல்லது

(iii) அவ்வாறான உள்ளூராட்சிச் சபையை இடைநிறுத்திவிட்டு மாநகரசபை ஆணையாளரை அல்லது பிராந்திய உதவி ஆணையாளரை அச்சபையின் தத்துவங்களை பிரயோகிக்குமாறும், கடமைகளை புரியுமாறும் பணிக்கலாம்.

(ஆ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆளின் அறிக்கையைப் பெற்றுக் கொண்டதன் மேல் அமைச்சரானவர் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றை ஆக்கலாம். அல்லது இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை இல்லாதொழிக்கலாம்.

(இ) மாநகரசபையொன்றின் முதல்வரை அல்லது வேறு உள்ளூராட்சிச் சபையொன்றின் தவிசாளரை அமைச்சர் பதவிநீக்கம் செய்யுமிடத்து அம்முதல்வர் அல்லது தவிசாளர், அவ்வுள்ளூராட்சிச் சபையின் உறுப்பினர் பதவியையும் இழந்தவராவர். அவ்வாறான உள்ளூராட்சிச் சபையின் வெற்றிடமொன்றை நிரப்புவதில் உள்ளூராட்சிச் சபைகள் தேர்தல் சட்டத்திற்கமைவான செயல்முறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

(4) மாநகர சபையொன்று அல்லது வேறு உள்ளூராட்சிச் சபையொன்று முற்றாகக் கலைக்கப்படுமிடத்து, மாநகர சபைச்சட்டம் அல்லது வேறு உள்ளூராட்சிச் சபைச்சட்டம் ஆகியவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறான புதியதொரு சபையை ஏற்படுத்த வேண்டுமென வர்த்தமானியில் வெளியிடப்படும் விதிப்பிரமானங்களின்படி அமைச்சரினால் கட்டளை பிறப்பிக்கப்படலாம்.

(5) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் எல்லாக் கட்டளைகளும் அக்கட்டளைகளுக்குத் தேவையெனக்கருதப்படும் பணிப்புரைகளையும் கொண்டதாக அமைதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் கட்டளைகள் சட்டத்தினது இயல்பைக் கொண்டதாய் அமையும்.

(6) கலைக்கப்பட்டதான மாநகர சபையொன்றிற்கு அல்லது வேறு உள்ளூராட்சிச் சபையொன்றிற்காகத் தெரிவு செய்யப்படும் மாநகரசபை அல்லது வேறு உள்ளூராட்சிச் சபையானது அது தாபிக்கப்படுவதற்குநேர்முன்னர் செயல்பட்ட சபையின்பால் சார்ந்த உள்ளூராட்சிச் சபைகள் சட்டத்தின்மூலம் கொடுக்கப்பட்டதான அதிகாரங்கள், தத்துவங்கள், கடமைகள், நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பிரயோகித்த அவ்வாறான சபையினதும், அதன் ஆட்கள் அல்லது ஆளொருவரினதும் இடையறாத வழியுரிமை கொண்டதான புதிய சபையாக அமையும்.

7. பொருள்கோடல் :

இந்நியதிச்சட்டத்தின் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி "பிரதம தவிசாளர்" எனப்படுபவர் மாநகர சபையொன்றில் மாநகர முதல்வர் என்பவரும் நகரசபை அல்லது பிரதேச சபையொன்றில் சபைத் தலைவருமாவார்.

08-459

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.